**R5297**

# THE GOLDEN CALF

# பொன் கன்றுக்குட்டி

யாத்திராகமம் 32: 15-20, 30-35

"பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக!" – 1 யோவான் 5:21

இஸ்ரயேலர்கள் தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் நுழைந்தவுடன் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலில் ஒரு கடுமையான சோதனையை அனுபவித்தார்கள். இந்த சோதனையில் அவர்கள் முற்றிலுமாக தோற்றுப்போனார்கள். உடன்படிக்கையும் முறிக்கப்பட்டது. எனினும் அவர்களை தேவன் தண்டித்த பிறகு தேவன் அவர்களுடனான உடன்படிக்கையை புதுப்பித்தார். இது தெய்வீக இரக்கத்தின் புதிய வெளிப்படுத்தலை அமைத்தது.

இந்த சோதனையின் சூழ்நிலைகள்தான் இந்த பாடத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. இந்த உடன்படிக்கையை செய்த பிறகு தெய்வீக வழிநடத்துதலின்படி மோசே, தனது ஊழியக்காரன் யோசுவாவுடன் சீனாய் மலைக்குச் சென்றார். அவர் ஒரு பெரும் காலப்பகுதியான நாற்பது நாட்கள் சூழ்நிலையின் கீழ் அங்கே சென்றார். இஸ்ரயேலர்கள் மோசேயின் கைகளில் தங்களை குழந்தைகளைப் போல் உணர்ந்தனர். அவர் அவர்களுக்கு ஒரு விசேஷித்த உணர்வில் தேவனுடைய பிரதிநிதியாக இருந்தார். அவர் நீண்ட காலம் திரும்பி வராதிருந்தது, அவர்கள் விசுவாசம், பொறுமை, நம்பிக்கை ஆகியவற்றில் வளர்வதற்கு இடம் கொடுத்தது.

அவர்கள் கடந்து சென்ற சோதனையான அனுபவங்களை நினைவு கூர்ந்தனர். எகிப்தியர்களும் அடிமைத்தனமும் அவர்களுக்கு பின்னே இருந்தது. அமலேக்கியர்கள் அவர்களைத் தாக்கி அவர்களது விரோதிகளாக இருக்கின்றனர். இன்னும் அவர்கள் இஸ்ரயேலரைத் தாக்கவும் மோசேயின் கைகள் உயர்ந்திருக்கும் போது போரில் அவர்கள் தேவனுடைய கிருபையையும் செழுமையையும் பெற்ற அவர்கள், மோசே இல்லாதிருக்கும் போது அவர்களால் என்ன செய்யக்கூடும்?

இங்கே உலக ஞானம் உள்ளே வந்தது. மோசேயின் சகோதரனும் பிரதான ஆசாரியனுமான ஆரோனும் உடனிருந்த மற்ற பிரதிநிதிகளும், ஜனங்களை அதைரியம், பயம் முதலியவற்றிலிருந்து எப்படி வைத்திருப்பது என்று குழம்பியிருந்தனர். தேவனுடைய பிரதிநிதியை அவர்கள் காணும்படி செய்வது அவர்களுக்கு அவசியமாகக் காணப்பட்டது. தேவனுடைய விசேஷித்த பிரதிநிதியாகிய மோசே பார்வைக்கு காணப்படாமல் போனதிலிருந்து ஜனங்களால் உண்மையில் தேவனிடத்தில் முழுமையான நம்பிக்கை வைக்க முடியவில்லை.

ஜனங்களின் தலைவர்கள் ஒவ்வொருவரும் யோசனை செய்து, தேவனுடைய பிரதிநிதியை உருவமாக செய்து, அதை ஜனங்கள் காணும்படியும் அதை ஆராதிக்கும்படியும் செய்யலாம் என்று தீர்மானித்தார்கள். இஸ்ரயேலர்கள் பொன் கன்றுக்குட்டியை அவர்களுடைய தேவன் யேகோவா என்று நினைக்காமல் அதை வெறும் ஒரு அடையாளமாக அல்லது பிரதிநிதியாக எண்ணினார்கள். புறஜாதிகளும் சிலைகளை அவர்களது தேவர்களின் பிரதிநிதியாக பயன்படுத்தினார்கள். சில கிறிஸ்தவர்கள் கூட இயேசு அறையப்பட்ட சிலுவையை கிறிஸ்துவின் பிரதிநிதியாக கருதுகிறார்கள். அதை ஆராதிக்க அல்ல, கவனத்தை திருப்பவும், விசுவாசத்திற்கு உதவிபுரியவும் பயன்படுத்துகிறார்கள்.

இன்றைய பாடம், தேவன் தம்மை குறிக்க ஒரு அடையாளத்தை ஏற்படுத்துவதை முற்றிலும் வெறுத்தார் என்பதை தெளிவாக குறிப்பிடுவதாக காணப்படுகிறது. இது இஸ்ரயேலர்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகளில் ஒன்றாக இருந்தது. "தேவனுக்கு ஒப்பாக ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்." அதை பணிந்து கொண்டு, ஆராதிக்கவும் வேண்டாம்.

## பொன் கன்றுக்குட்டியை உண்டாக்குதல்

கன்றுக்குட்டி திடமான உலோகத்தில் செய்யப்பட்டதாக நாம் நினைக்கக்கூடாது. இஸ்ரயேலரின் சகல நகைகளை சேர்த்து திடமான உலோகத்தில் ஒரு கன்றுக்குட்டியை செய்ய போதுமானதாக இருந்திருக்கும் என்று நாம் நினைக்கக்கூடாது. அந்த காலத்தின்படி கன்றுக்குட்டியானது களி மண்ணினாலோ அல்லது மரத்தினாலோ செய்யப்பட்டு, அது உருக்கிய உலோகத்தால் மூடப்பட்டிருக்கலாம். இதற்கு ஜனங்களின் நகைகள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இது உண்மையிலேயே செதுக்கப்பட்டது அல்லது உருவாக்கப்பட்டது. இந்த விக்கிரகத்தை உருவாக்கி, தேவன் தங்களிடையே இருப்பதற்கு இது ஒரு ரூபகாரம் என்று நினைத்து ஜனங்கள் களிகூர்ந்தார்கள். அவர்கள் தங்களை, ஆடல், பாடல், விருந்து போன்ற கேளிக்கைகளில் உட்படுத்திக்கொண்டார்கள்.

மோசே தேவனுடன் மலையில் நாற்பது நாட்கள் கழித்த முடிவில் இந்த நிலைமை தான் அங்கே இருந்தது. மோசே பிரமாணங்களை அடங்கிய பலகைகளுடன் மலையிலிருந்து கீழே வந்த போது, அவர் ஜனங்களின் ஆரவாரத்தையும், பொன் கன்றுக்குட்டியை ஆராதிப்பதையும், பலிகளையும், தூபவர்க்கங்களையும் செலுத்துவதையும் கண்டார். மோசே கோபங்கொண்டார். அவர் தேவனுக்கும் இஸ்ரயேலருக்கும் மத்தியஸ்தராக, இருவருக்கும் பிரதிநிதியாக இருந்தார். கோபங்கொள்ள அவருக்கு உரிமையிருந்தது. ஏனெனில், தேவன் அவரை தேசத்திற்கு பொறுப்பானவராக நியமித்திருந்தார். அவர் தாம் இல்லாதிருந்த சமயத்தில் தேவனுடைய பிரமாணத்திற்கு விரோதமாக ஏற்பட்ட கடுமையான குற்றமாக அதை கருதினார்.

மோசே பிரமாணங்கள் அடங்கிய கற்பலகைகளை உடைத்துப்போட்டார். இது உடன்படிக்கை உடைக்கப்பட்டதை குறிப்பதாக இருந்தது. அவர் கீழே ஜனங்களிடம் சென்று தேவனுடைய பிரதிநிதியாக கோபங்கொண்டார். அவர்கள் தேவனிடமிருந்து பிரிந்து, சீக்கிரத்தில் பின்னடைந்து பாவத்தில் விழுந்ததால், மோசே தேவனுடைய அதிகாரத்துடன் அவர்களை நீதியாக தண்டித்தார்.

மோசே, ஜனங்களின் பிரதிநிதியாக இன்னும் அவர் உயர்ந்த தேசபக்தனாக இருந்தார். அவர் ஜெபத்தில் தேவனிடம் சென்று, இந்த பாவத்திற்கு தண்டனையாக ஜனங்களை அழிப்பதற்கு பதிலாக தனது பேரை கிறுக்கிப் போடும்படி வேண்டினார். தேவனுடைய பார்வையில் மோசே மட்டுமே உண்மையுள்ளவராக காணப்பட்டார். ஆகையால் தேவன் மோசே மூலமாக ஒரு ஜாதியை உருவாக்கி அவர்களை இஸ்ரயேலுக்கு வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தை சுதந்தரிக்கும்படி செய்வேன் என்று கூறினார். இங்கே மோசே நிரூபித்த இப்படிப்பட்ட தேசபக்திக்கு சமமானதை நாம் காண இயலாது. அவர் இஸ்ரயேலரின் பிரதிநிதியாகவும், மத்தியஸ்தராகவும் அவருடைய வேலைக்கு உண்மையுள்ளவராக இருந்தார். அதே சமயம் அவர் தேவனுடைய பிரதிநிதியாகவும் தேவனிடம் உண்மையுள்ளவராகவும் இருந்தார் என்பதை அர்த்தப்படுத்துகிறது.

### "விக்கிரகங்களுக்கு விலகி உங்களை காத்துக்கொள்ளுவீர்களாக"

நாம் இப்போது பாடத்தை ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு உபயோகிப்போம். கிறிஸ்தவன் உலகம், அடிமைத்தனம், பாவம் ஆகியவைகளை விட்ட பிறகு, மாராவின் கசப்பான அனுபவத்தை கடந்த பிறகு, தேவனுடைய கிருபையின் வெளிப்பாடுகளை பெற்ற பிறகு, பரலோகத்திலிருந்து வந்த அப்பத்தில் பங்கு பெற்ற பிறகு, தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் வந்த பிறகு, அவன் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கும் ஒரு நேரம் வருகிறது. அவன் கர்த்தரால் மெய்ப்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறான். அவன் இந்த பாடத்தில் நிழலான இஸ்ரயேலர்கள் செய்ததைப் போல தோல்வியுற்றால், அது அவனுக்கு ஒரு அபாயகரமான காரியமாக இருக்கும்.

எந்த ஒரு கிறிஸ்தவனும் சொல்லர்த்தமான பொன் விக்கிரகத்தை செய்யக்கூடியவனாக இருப்பான் என்று கூறவில்லை. எனினும் விக்கிரகத்தை உண்டாக்கி, தேவனுக்குரிய நமது வழிபாட்டை திசைதிருப்பி, உறிஞ்சுகிற மாபெரும் சோதனைகளும் பரீட்சைகளும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கும் வரும் என்று கூறுகிறோம். பொன் கன்றுக்குட்டி என்பது வியாபாரத்தை ஆராதனை செய்வது. அவர்கள் முற்றிலுமாக தனது நேரத்தையும், சக்தியையும் கொடுத்து தங்களை முழுமையாக அர்ப்பணிப்பார்கள். அவர்கள் அதை தெய்வமாக மதிப்பார்கள். பணத்தின் மேலுள்ள ஆசை மற்றும் அது சம்பாதிக்கிற பொருட்களும் விக்கிரக ஆராதனைக்கும் வழி நடத்தும். அதன்மூலம் கர்த்தருடனான அவர்களது உடன்படிக்கையை முறித்துப்போடும். மற்றவர்கள் எதிர் பாலினத்தை வழிபாட்டுக்குரியதாக்கி, அதை தயவுக்காகவும், தோழமைக்காகவும் தாங்கள் வைத்திருக்கிற அனைத்தையும் கொடுக்கிறார்கள். அவர்கள் அப்போஸ்தலர் விளக்குவது போல, சிருஷ்டிகரைக் காட்டிலும் சிருஷ்டிகளை ஆராதிக்கிறார்கள். அவர்கள் பெரிய தவறை செய்து கொண்டிருக்கிறார்கள். என்னைக் காட்டிலும் தனது தகப்பனையாவது, தாயையாவது, அல்லது குழந்தையாவது அல்லது சுயத்தையாவது அல்லது வேறு எந்த சிருஷ்டியையாவது நேசிக்கிறவன் எனக்கு பாத்திரவனாக இருக்க மாட்டான் என்று இதைத்தான் இயேசு அறிவித்திருந்தார்.

இன்னும் ஒரு விக்கிரகத்தை கவனிக்க வேண்டும். அதாவது தமது சபைப்பிரிவின் மேல் உள்ள பக்தி. பரிசுத்த பவுல் இந்த விக்கிரகத்தை குறித்து எச்சரித்து கூறுகிறதாவது: "உங்களில் சிலர் நான் பவுலைச் சேர்ந்தவன் என்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன் என்றும், நான் கேபாவைச் சேர்ந்தவன் என்றும் சொல்லுகிறார்கள்." (1 கொரிந்தியர் 1:12; 3:4) மனிதர்களைக் கனப்படுத்துகிற இது ஒரு வகையான விக்கிரக ஆராதனை இல்லையா என்றும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களல்லவா? என்றும் அவர் கேட்கிறார். இதே கொள்கையை நமக்கும் பொருத்திப் பார்த்து, சபைப்பிரிவை ஆராதிக்கிறதற்கு எதிராக நம்மை காத்துக்கொள்ளுங்கள். ஒருவர் "நான் கேல்வினைச் சேர்ந்தவர்" என்றும் இன்னொருவர் "நான் லூதரைச் சேர்ந்தவர்" என்றும், "நான் வெஸ்லியைச் சேர்ந்தவன்" முதலானவைகளைக் கூறினால், இவர்கள் மாம்சத்துக்குரியவர்கள் என்று நிரூபணமாகவில்லையா? மனித பெயர்களைக் கொண்டிருக்கிற மனித ஸ்தாபனங்களை ஆராதிப்பது இதை விட மோசமான அபாயமில்லையா? இப்படியாக தேவனுக்கும் கிறிஸ்தவனின் ஆத்துமாவுக்கும் இடையே ஏதோ ஒன்று இருப்பது ஆபத்தானதாக இல்லையா? இந்த திசையில் ஆபத்து இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் மதக்கோட்பாடு என்கிற விக்கிரகத்திலிருந்து விலக வேண்டும் என்றும், தேவனுடைய பிள்ளைகள் எந்தவிதமான விக்கிரகத்திலிருந்தும் திரும்ப வேண்டும் என்றும், தேவனை மட்டுமே ஆராதிக்க வேண்டும் என்றும் வற்புறுத்துகிறோம்.

வேதாகமத்திற்கு பதிலாக மதக் கோட்பாடுகளை ஏற்படுத்தி ஆராதிக்கிற ஒரு சுபாவம் முதன்முலாக நிசேயா விசுவாச பிரமாணத்திலிருந்து (கிபி 325) ஏற்பட்டது. ஒவ்வொரு மதக் கோட்பாடும் தல்மூஸ் யூதரிடம் செய்தது போல, வேதாகமத்தின் இடத்தை எடுத்துக் கொள்ளுகிறது. "உங்களுடைய பாரம்பரியங்களினாலே தேவனுடைய வார்த்தையை வெறுமையாக்குகிறீர்கள்" என்று இதற்கு எதிராக இயேசு கூறினார்.

கிறிஸ்தவ தேசங்களின் மதக்கோட்பாடுகள் எல்லாம் சத்தியத்தைக் குறித்த கிறிஸ்தவ பாரம்பரியங்கள். தேவனுடைய பிள்ளைகள் முழு வேதாகமத்தைத் தவிர வேறு எந்த மதக்கோட்பாடும் இருக்கக்கூடாது என்பதே தேவனுடைய நோக்கமாக இருக்கிறது. அவர்கள் தேவனுடைய வார்த்தை எல்லாவற்றிலும் நம்பிக்கை வைத்து, தினமும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து அதன் போதனைகளை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இப்படியாக தேவனுடைய பிள்ளைகள் கிருபையிலும் அறிவிலும் வளர வேண்டும். மதக்கோட்பாடு என்கிற விக்கிரகத்தை ஏற்படுத்த இயலாதபடியும் கர்த்தருடைய பிள்ளைகளின் கவனத்தை பல்வேறு திசைகளில் திருப்பாதபடியும் பார்த்துக் கொள்ள வேண்டும்.